திட்டத்தை மாற்றியிருக்கிறோம். அதே நேரத்தில் வேலை நிறுத்தம் செய்வோம், தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை கொடுக்காவிட்டால், என்று மாணவர்கள் சொன்னதனால் சென்ற ஆண்டு சென்னையிலே சேர்ப்பதை நிறுத்திவிட்டு மதுரையிலே சேர்த்தோம். இந்த ஆண்டு மாணவர்கள் அரசாங்கத்தை வற்புறுத்தி சில காரியங்கள் நடைபெற விரும்புவதால் இந்த ஆண்டு கூட சென்னையில் அந்த வகுப்பில் மாணவர்களைச் சேர்க்காமல் அடுத்த ஆண்டு சேர்ப்பது நல்லது என்பது அரசாங்கத்தினுடைய எண்ணம்.

திரு. கே. எ. வகாப்: பி. பார்மஸி, டி. பார்மஸி மாணவர்கள் சில தனிப்பட்ட மருந்தகங்களுக்குத் தேவைப்படுகிறார்கள். அவர்கள் அழைப்பிற்குப் போக இவர்கள் தயங்குகிறார்கள். அரசாங்க வேலையே வேண்டுமென்று கேட்கிறார்கள். தனிப்பட்டவர்களிடத்தில் வேலை பெற இவர்களுக்கு வசதிகளை செய்து அவர்களிடமே சேர்க்க அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மருந்துக் கூடங்களிலே சேரக்கூடியவர்கள் டிப்ளமோ இன் பார்மஸி உள்ளவர்கள், மருந்து தயாரிப்பவர்கள் என்ற தகுதி பெற்றவர்கள், டிகிரி பெற்றவர்கள். அந்த மருந்து உற்பத்தி நிலையங்களில் ஏற்கெனவே உள்ள அகில இந்திய சட்டப்படி பி. எஸ்ஸி. கெமிஸ்ட்ரி உள்ளவர்களோ அல்லது வேறு விதமாக பட்டப் படிப்பு உள்ளவர்களோ நியமிக்கப்படலாம் என்ற நிலைமை இருக்கிறது. பி. எஸ்ஸி. பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 300 சம்பளம் என்றால், பி. எஸ்ஸி. பார்மஸி பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 400 தர வேண்டியிருக்கிறது. நான் சொல்வதிலே சற்று தொகை வேறுபாடு இருக்கலாம். ஆகவே, பி. எஸ்ஸி.யையே எடுக்கிறார்கள். பி. எஸ்ஸி. பார்மஸி பட்டம் பெற்றவர்களை எல்லோரும் எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டுமானால் மத்திய அரசு அந்தச் சட்டத்தை திருத்தி பி. பார்மஸி படித்த எல்லோருக்கும் வேலை வாய்ப்பு என்ற நிலையை உருவாக்கினால் இன்னும் கொஞ்சம் அதிகமாக மருந்து உற்பத்தி நிலையங்களில் அவர்களுக்கு வேலை கிடைக்கும். அப்பொழுது அந்தக் குறை நீங்கும். ஆனால், அரசாங்கம் அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கக்கூடிய வாய்ப்புகளை அண்மையிலே செய்திருக்கிறது.

Psychological Research Institute

*482 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up any para-psychological research Institute in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1973 மார்ச் 23]

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இவ்விதமான ஆராய்ச்சி நிலையங்கள் வேறு மாநிலங்களிலே அமைக்கப்பட்டு அவையெல்லாம் திருப்திகரமாக செயல்படுகின்றன. ஆதலால் இங்கேயும் அப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்கள் அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கண்ணுக்குத் தெரிந்த குறைகளைச் சீர்திருத்துவதற்குப் பல்வேறு முயற்சிகள் தேவைப் படுகின்றன. இது கொஞ்சம் தொலைவானது. telepathy, clairvoyance and precognisance என்று சொல்லப்படுகிற ஏறத்தாழ குறிசொல்வது போன்ற காரியங்கள், தொலைவிற்கு அப்பாலே நடை பெறுகின்ற காரியங்களை உணர்ந்து சொல்லுதல் பிறர் மனத்தினை உணர்ந்து சொல்லுகின்ற ஆற்றல் பற்றியது ஆகும். இது உடனடியாகத் தேவைப்படுகிறதா என்பதை அரசு ஆராய்ந்து பார்த்தபொழுது இதைவிட உடனடியாகத் தேவைப்படுகின்ற பலகாரியங்கள் இருப்பதால் அரசாங்கம் இதைப்பற்றி இப்பொழுது ஆலோசிக்கவில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, சிலர் அரசாங்க மருத்துவ மனைகளிலே எந்தவிதமான நோயும் இல்லாமல் படுத்து விடுகிறார்கள். எந்தவிதமான நோயும் இல்லை என்பதால் டாக்டர்களால் குணப்படுத்தமுடியவில்லை. இதனால் அவர்கள் அங்கே படுத்துவிடுவதால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே மன இயல்புகளைக் கண்டறிந்து அதற்குத் தேவையான மருந்துகளைக் கொடுக்கக்கூடிய முறை யிலே இப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, உண்மை யிலேயே சைக்காலஜி பற்றிய பாடங்கள் இப்பொழுது உள்ளன. இது பாரா-சைக்காலஜி. முழுவதும் சைக்காலஜி அல்ல. உண்மையாக மனக் குறையைக் கண்டறிந்து மருந்து கொடுப்பதற்கான அறிவு வாதத்திற்கு இது உட்பட்டதல்ல. ஆனால், உணர்ச்சி நிலையில் செய்யப்படவேண்டிய ஒன்றைப் பற்றியதாக இருக்கின்ற காரணத்தினாலே இதைப்பற்றி அதிக அளவிலே ஆராய்ச்சி செய்வதற்குப் போதுமான நிதியைச் செலவழிக்கக்கூடிய நிலை இப்பொழுது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: சமுதாயத்திலே புதிதாகத் தோன்றி யிருக்கும் ஹிப்பிஸம், ஹரே கிருஷ்ண, நக்ஸலைட் போன்ற இயக்கங்கள் எல்லாம் உளவியல் கோளாறுகளினால் உண்டாகின்றன என்பதை அரசாங்கம் உணருகிறதா இல்லையா என்பதைக் கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பக்தி மார்கத்தில் ஏற்படுகிற தவறான இயக்கங்களாலோ அல்லது அறிவு மார்க்கம் என்று சொல்லிக் கொண்டு பலாத்கார இயக்கங்களிலோ ஈடுபடுகின்றனவர்களுக்கு ஓரளவிற்கு மனக்கோளாறு ஏற்படுகிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். அது சைக்காலஜி. இது பாராசைக்காலஜி என்று சொல்லப்படுகிறது. இதிலே ஆராயப்படுகிற காரியங்கள் என்ன என்ன என்று கேட்டால் telepathy, clairvoyance and pre cognisance இந்த மூன்றும் சொல்லப்படுகிறது. இது

சைக்காலஜி என்ற முறையிலே காணப்படவேண்டிய ஆராய்ச்சிக்குச் சற்று அப்பாற்பட்டது. மேல்நாடுகளிலே இது அதிகமாக இடம் பெற்றிருக்கிறது. இங்கே உடனடியாக இடம்பெறவேண்டுமா என்பதுபற்றி இன்னும் முடிவுகட்டவில்லை.

திரு. நா. வீராசாமி : நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு பெரிய பெரிய பதவிகளில் உள்ள அதிகாரிகள் கிராம மக்களிடத்திலே பழகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அந்தப் பெரிய பதவிகளிலே உள்ளவர்கள் கிராம மக்களின் மனப் பான்மையைப் புரிந்துகொள்ளவில்லை. அப்படிப்பட்ட ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், மற்ற பெரிய அதிகாரிகளுக்கு சைக்கலாஜிக்கல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்டில் டிரெயினிங் கொடுத்து பயிற்சி அளிக்க நம்முடைய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், கிராம மக்களிடத்திலே பழகமுடியாத அதிகாரிகள் யாரும் இல்லை. அதிகாரிகளைப் பொறுத்த வரையில், அமைச்சர்கள் எவ்வழியோ அவ்வழிதான் அதிகாரிகள். ஆகவே அதிகாரிகள் குறைபாடு உடையவர்கள் அல்ல. கிராமத்தில் உள்ள சிலரிடத்தில் அதை உணர்ந்துக்கொள்வதற்கான நிலை இல்லை. இந்தக் கேள்வி அது சம்பந்தமானது அல்ல.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, உளவியல் ஆராய்ச்சி நம் நாட்டிற்கு அவசியமில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அண்மையிலே மறுபிறவி என்ற திரைப்படம் வந்திருக்கிறது. உளவியல் கோளாறினால் நல்ல குடும்பம் எப்படி பாதிக்கப்படுகிறது என்பதை நல்ல முறையிலே அது எடுத்துக் காட்டுகிறது. எனவே உளவியல் ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, உளவியல் பற்றி இப்பொழுதும் சென்னைப் பல்கலைக் கழகத்திலே பாடத் திட்டங்கள் இருக்கின்றன. மருத்துவக் கல்லூரியிலும் பாடத் திட்டம் இருக்கிறது. இதைத் தவிர மன நோய் சிகிச்சை வல்லுநர்களாவதற்கும் பாடத் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இது அதுபற்றியல்ல. இதுதொலைவில் உள்ளதைப் பற்றி உணர்தல் அல்லது அறிதல், பிறர் மனத்தைக் காணுதல், குறி சொல்லுதல் போன்றவை பற்றி. அந்த அளவிற்கு இந்த அரசாங்கத்தால் முடியாது.

திரு. எஸ். ஆறுமுகம் : நடிகர்களைப் பார்த்து விசில் அடித்து வருகிறார்களே, அதற்கு மன மருத்துவம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நம்முடைய சக்தியைக் கொண்டு தான் அறிவை வளர்க்க வேண்டும். அறிவு வளர்ச்சி ஒன்று தான் இப்படிப்பட்ட நோய்களுக்கு மருந்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : சைக்காலஜி முறையில் டிரீட்மெண்ட் சென்னை நகரிலே தனியார்கள் பலராலும், அரசாங்கத்தாலும் கொடுக்கப்படுகிறது.

அதை மாவட்ட ரீதியிலே ஒவ்வொரு மாவட்டத்திலே உள்ள மருத்துவ மனைக்கும் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மனநிலை கோளாறை மாற்று வதற்கான மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. சென்னையிலே அப்படிப்பட்ட சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன என்றாலும் மாவட்டங் களுக்கும் அதைப் பரவலாக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு ஒப்புக் கொள்கிறது. அந்த முறையிலே மதுரையிலே அப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. படிப்படியாக அது பரவலாக்கப்படும்.

Co-operative Societies for Beedi Workers.

*483 *Q.*—Thiru N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Labour Ministers' Conference held at Mysore during 1972 has recommended to develop the beedi industry on co-operative basis ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) மாநில அரசுகள், அனைத்தும் பீடித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுவதை ஊக்குவிக்கலாம் என்று இம்மாநாடு ஒரு மனதாக ஒப்புக் கொண்டது. பீடித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை எங்கெல்லாம் அமைக்க வாய்ப்புகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அமைப்பது பற்றி ஆராயப்படுகிறது.

திரு. என்.கே. பழனிசாமி : அந்த சிபாரிசின் அடிப்படையிலே நம் முடைய மாநிலத்திலே அது பரிசீலிக்கப்பட்டதா? அப்படிப் பரிசீலிக்கப்பட்டதின் அடிப்படையிலே உடனடியாக என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப் படும்? அவர்களுக்கு கோவாப்பரேடிவ் முறையிலே சொஸைடி ஏற்பட்டால் பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சச் சம்பளம், பிராவிடெண்ட் பண்ட் வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தைப் போல் அரசு அதை ஆராய்ந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பீடித் தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு முறையிலே ஏற்படுத்தப்பட்டு கேரளாவிலே நல்ல முறையிலே நடப்பதாகச் சொல்கிறார்கள். இந்த அரசாங்கம் கொள்கை ரீதியிலே ஒப்புக் கொண் டாலும் இந்த ஆண்டு ஏதாவது கூட்டுறவு சொஸைடி அமைக்க செயற் குறிப்பு உண்டா?